# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை** 173 BNSS

(Under Section 154 Cr.P.C.)

(~~குற்ற விசாரணை முறை சட்டம்~~ 154 இன் கீழ்) 1A C 8120336

1. District : மாவட்டம் Namakkal PS: காவல்நிலையம் VAC Year: ஆண்டு 2025 FIR No.: முத.தஅ. எண் 05/AC/2025 Date: நாள் 19.09.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 18.09.2025 Date to : நாள் வரை 19.09.2025

Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 12.10hrs Time to : நேரம் வரை 11.10hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.09.2025 Time : நேரம் 20.30hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II Time : நேரம் 21.30hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 3kms North west

Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Infront of Namakkal District Collectorate.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Navaneethan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Raja gopal

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age-36 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —

(f) Occupation : தொழில் Electrician (g) Address : முகவரி Door No. 2/120A, Anna Nagar, Molasi, Tiruchengode T.K, Namakkal Dt.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. Madhu, LI, AE office, TNPDCL, Ernapuram.

2) Tr. Vicky@ Vivekanandhan, Helper, AE office, TNPDCL, Ernapuram.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No Delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted.

Separate sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/09/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளரி / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 20.09.2025 at 0700hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. PRABHU
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
V & A C, Namakkal.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/AC/2025 u/s 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 19.09.2025-ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு 20.30 மணிக்கு நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, புகார்தாரர் திரு.R.நவநீதன் (வயது-36), S/o. ராஜகோபால், கதவு எண்.2/120-A அண்ணா நகர். மொளசி, திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் R. நவநீதன் (வயது-36), S/o. ராஜகோபால், கதவு எண்.2/120-A அண்ணா நகர், மொளசி, திருச்செங்கோடு தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, நாமக்கல். ஐயா,நான் மேலே குறிப்பிட்டுள்ள முகவரியில் எனது அம்மாவுடன் குடியிருந்து வருகிறேன். நான் B.E., வரை படித்துள்ளேன். நான் எலக்ட்ரீசியன் வேலை செய்து வருகிறேன். எனது அம்மா ஜானகி மற்றும் எனது பெரியப்பா மகன்களான செந்தில்குமார், பாலன், வெங்கடேஷ், முருகேசன் ஆகியோர் பெயர்களில் கூட்டாக திருச்செங்கோடு தாலுக்கா, முசிறி கிராமம் சர்வே எண்.144/18-ல் உள்ள 81 செண்ட் புன்செய் விவசாய நிலம் கடந்த 22.3.2024-ம் தேதி வேலகவுண்டம்பட்டி ரிஜிஸ்டர் ஆபீசில் கிரையம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் புதிய வீடு கட்டுவதற்காக எனது அம்மா பெயரில் ஒரு புதிய தற்காலிக மும்முனை மின் இணைப்பு பெறுவதற்காக கடந்த மே மாதத்தில் ஒருநாள் நாமக்கல்லில் உள்ள ஒரு கம்ப்யூட்டர் சென்டரில் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்திருந்தேன். அதைத் தொடர்ந்து 6.6.2025-ம் தேதி நல்லிபாளையம் மின்வாரிய அலுவலகத்திலிருந்து எனது செல்போனுக்கு பேசிய ஒருவர் தன்னை போர்மேன் என்றுகூறி எங்களுடைய EB சர்வீஸ்க்கு எஸ்டிமேசன் தொகை ரூ.13,300/- வருகிறது என்றும், அதை ஆன்லைனில் கட்டிவிடுமாறும் கூறினார். எனவே, நான்

ரூ.13,300/-ஐ தமிழ்நாடு மின்வாரியத்திற்கு ஆன்லைன் மூலம் செலுத்திவிட்டு, EB சர்வீஸ் பெறுவதற்காக ஒயரிங் வேலைகளை முடித்து வைத்துவிட்டேன். பின்பு எனது சொந்த வேலை காரணமாக என்னால் சுமார் 3 மாத காலமாக நல்லிபாளையம் மின்வாரிய அலுவலகம் போகமுடியவில்லை. இதற்கிடையில் நல்லிபாளையத்தில் செயல்பட்டு வந்த மின்வாரிய உதவிப் பொறியாளர் அலுவலக எல்லைகள் இரண்டாக பிரிக்கப்பட்டு முசிறி கிராமத்தை உள்ளடக்கிய மின்வாரிய உதவிப்பொறியாளர் அலுவலகம் புதிதாக எர்ணாபுரத்தில் திறக்கப்பட்டுள்ளதாக கேள்விப்பட்டேன். எனவே கடந்த 8.9.2025-ம் தேதி எர்ணாபுரத்தில் உள்ள மின்வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு மின் இணைப்பு குறித்து விசாரிக்க சென்ற போது அங்கு பெண் கணக்கீட்டாளர் ஒருவர் மட்டுமே இருந்தார். அவர் மற்ற பணியாளர்கள் வெளியே சென்றுவிட்டதாக என்னிடம் கூறியதால், உதவி பொறியாளர் செல்போன் நெம்பர் கொடுக்குமாறு அவரிடம் கேட்டு, உதவி பொறியாளர் திருமதி.கோகிலா என்பவரின் செல்போன் நெம்பரை வாங்கிகொண்டு நான் அங்கிருந்து வந்துவிட்டேன். அதன்பிறகு எர்ணாபுரம் மின்வாரிய உதவிப் பொறியாளர் கோகிலா அவர்களை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு நான் பேசியபோது, அவர் என்னிடம் உங்கள் EB சர்வீஸ்க்கான மெட்டீரியல் ஸ்டோரிலிருந்து வரவில்லை என்றும், வந்தவுடன் சீக்கிரம் சர்வீஸ் கனெக்சன் கொடுத்துவிடுவதாகவும் சொன்னார். அதன்பிறகு நேற்று 18.9.2025-ம் தேதி பகல் சுமார் 12.10 மணியளவில் 9791308147 என்ற செல்போன் நெம்பரிலிருந்து எனது செல்போன் நெம்பர் 9003557779-க்கு ஒரு அழைப்பு வந்தது. அதில் பேசிய நபர் அவர் தான் எர்ணாபுரம் EB ஆபீசிலிருந்து ஹெல்பர் விக்கி பேசுவதாகவும், எங்கள் EB சர்வீஸ்க்கு லைன் இழுப்பதற்காக வந்துள்ளதாகவும் சொல்லி என்னை முசிறி கிராமத்திற்கு வருமாறு சொன்னார். அப்போது நான் வேறு வேலையாக வெளியில் இருப்பதாக கூறினேன். அதற்கு அவர் லைன் இழுப்பதற்கு தாங்கள் இரண்டு பேர் வந்துள்ளோம் என்றும், அதனால் தங்களுக்கு தனியாக செலவுக்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும்

சொன்னார். அதற்கு நான் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் L.I. சொல்லுவார் என்று கூறி மற்றொருவரிடம் செல்போனை கொடுத்தார். அவர் நான் L.I. மாது பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு, நாங்க இரண்டு பேர் வந்திருக்கிறோம், பணம் 1,500 ரூபாய் தனியாக செலவுக்கு கொடுத்திருங்க என்று சொன்னார். நான் வேறு வேலையாக வெளியூரில் இருப்பதால் இரண்டு நாள் கழித்து வந்து பணம் கொடுப்பதாக சொன்னேன். அதற்கு அவர் தான் பேசிக் கொண்டிருந்த ஹெல்பரின் செல் நெம்பருக்கு G-Pay மூலம் பணம் அனுப்பிவிடுமாறு சொன்னார். நானும் சரி அனுப்பிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். அதன்பிறகு இன்று 19.9.2025-ம் தேதி காலை முசிறி கிராமத்திற்கு சென்று எங்கள் EB சர்வீசுக்கு லைன் இழுத்திருக்கிறார்களா என்று பார்த்துவிட்டு எர்ணாபுரம் வந்து ஹெல்பர் விக்கி என்பவரிடம் செல்போனில் காலை சுமார் 11.00 மணியளவில் பேசினேன். அப்போது தான் கலெக்டர் ஆபீசுக்கு எதிரே சேகர் டீக்கடையில் இருப்பதாகவும், கலெக்டர் ஆபீஸ் பக்கம் வந்துவிட்டு தன்னை கூப்பிடுமாறும் ஹெல்பர் விக்கி என்னிடம் சொன்னார். அவர் சொன்னது போல் கலெக்டர் ஆபீஸ் எதிரில் வந்து அவரை நேரில் பார்த்து தாங்கள் ஏற்கனவே கேட்டவாறு பணம் ரூ.1,500/- மட்டும் கொடுத்தால் போதுமா அல்லது வேறு எதற்காவது பணம் கொடுக்க வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர் L.I. மாதுவிடம் தான் கேட்க வேண்டும் என்று சொல்லி, அவருக்கு போன் போடுமாறு என்னிடம் L.I. மாதுவின் சொல்போன் நெம்பரை கொடுத்தார். எனவே நான் எனது செல்போன் நெம்பர் 9003557779-லிருந்து L.I. மாதுவின் 9500665343 என்ற செல்போன் நெம்பரில் சுமார் 11.10 மணிக்கு அவரிடம் பேசிய போது ஹெல்பரிடம் பணம் 1,500/- ரூபாய் கொடுத்துவிடுமாறு சொன்னார். அதுபோக வேறு எதற்காவது பணம் கொடுக்க வேண்டுமா என்று அவரிடம் கேட்ட போது எனது செல்போனை ஹெல்பர் விக்கியிடம் கொடுக்குமாறு சொன்னார். நானும் அவ்வாறு எனது செல்போனை ஹெல்பர் விக்கியிடம் கொடுத்தேன். அவர் L.I. மாதுவிடம் தெலுங்கு மொழியில்

ஏதோ பேசிவிட்டு என்னிடம் போனை திரும்ப கொடுத்துவிட்டார். பிறகு ஹெல்பர் விக்கி என்னிடம், வழக்கமாக 3 பேஸ் கனெக்சனுக்கு நான்காயிரம் ரூபாயும், சிங்கிள் பேஸ் கனெக்சனுக்கு 2,500/- ரூபாயும், தனியாக ஆபீசில் செலவுக்காக வாங்குவார்கள் என்றும், அதனால் தனக்கும் L.I. மாதுவுக்கும் ரூ.1,500/- பணமும், ஆபீசுக்கு கொடுப்பதற்கு ரூ.4,000/- பணமும் கொடுக்குமாறு சொன்னார். நானும் எனது அம்மாவிடம் பணத்தை வாங்கிவந்து தருவதாக சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். எனக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எங்கள் நிலத்தில் வீடு கட்டுவதற்கு, புதிய மின் இணைப்பு பெற விருப்பமில்லை. என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூ.5,500/- பணத்துடன் L.I. மாது, ஹெல்பர் விக்கி என்கிற விவேகானந்தன் ஆகியோரை நேரில் சந்திக்க தயாராக இருக்கிறேன். எனவே, என்னிடம் லஞ்சம் கேட்ட எர்ணாபுரம் மின்வாரிய உதவிப் பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரிந்து வரும் L.I. மாது, ஹெல்பர் விக்கி என்கிற விவேகானந்தன் ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/- xxxxx (R.Navaneethan) 19/09/2025.

Sir,

I received the above computer typed complaint on 19.09.2025 at 20.30 hrs and the genuineness of the informant was verified through sources and found to be genuine and the integrity of the accused was also verified through sources and learnt to be not good. The motive and antecedents of the complainant with the accused have been checked carefully and found nothing adverse. Hence, I obtained oral concurrence from the DVAC, Chennai and I registered a case in Namakkal Vigilance and Anti-Corruption, Cr.No.05/AC/2025 u/s. 7(a) of the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 19.09.2025 at 21.30 hrs against Tr.Madhu, LI and Tr.Vicky @ Vivekanandhan, Helper. Sd/-(xxxxxxx) (S.Prabhu) 19/9/25. Inspector of Police, V&AC., Namakkal.

Original FIR along with original computer typed complaint of Tr.R.Navaneethan are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Namakkal and remaining copies are sent to the officers concerned and I took up investigation.

(S. PRABHU)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Namakkal.